

# கவலைகள், துன்பங்கள் நீங்க ஓத வேண்டிய துஆக்கள்

தொகுப்பு

அல்கோபார் அழைப்பகம், தமிழ்ப் பிரிவு

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# கவலைகள், துன்பங்கள் நீங்க ஓத வேண்டிய பிரார்த்தனைகள்

01

## யூனுஸ்(அலை) அவர்கள் கேட்ட துஆ

لَآ اِلٰهَ اِلَّآ اَنْتَ سُبْحٰنَكَ
اِنِّیْ كُنْتُ مِنَ الظّٰلِمِیْنَ

லா இலாஹ இல்லா அன்த்த சுப்ஹானக்க
இன்னீ குன்த்து மினழ் ழாலிமீன்

உன்னைத் தவிர வணக்கத்திற்குரிய இறைவன் யாருமில்லை; நீ மிகவும் தூய்மையானவன்; நிச்சயமாக நான் அநியாயக்காரர்களில் ஒருவனாகி விட்டேன்

**திருக்குர்ஆன் 21:87**

# கவலைகள், துன்பங்கள் நீங்க ஓத வேண்டிய பிரார்த்தனைகள்

02

اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنْ زَوَالِ نِعْمَتِكَ وَتَحَوُّلِ عَافِيَتِكَ وَفُجَاءَةِ نِقْمَتِكَ وَجَمِيعِ سَخَطِكَ

அல்லாஹும்ம இன்னீ அஊது பிக்க மின் ஸவாலி நிஃமத்திக, வ தஹவ்வுலி ஆஃபியத்திக, வ ஃபுஜாஅத்தி நிக்மத்திக, வ ஜமீஇ சகத்திக

இறைவா! உன் அருட்கொடைகள் நீங்குவதிலிருந்தும், நீ வழங்கிய (ஆரோக்கியம், செல்வம் போன்ற) நன்மைகள் (நோய், வறுமை போன்ற தீங்குகளாக) மாறி விடுவதிலிருந்தும், உனது தண்டனை திடீரென வருவதிலிருந்தும், உனது கோபத்திற்கு உள்ளாக்கும் அனைத்து அம்சங்களிலிருந்தும் உன்னிடம் நான் பாதுகாப்புக் கோருகிறேன்.

அப்துல்லாஹ் இப்னு உமர்(ரலி), முஸ்லிம் 5289

# கவலைகள், துன்பங்கள் நீங்க ஓத வேண்டிய பிரார்த்தனைகள்

03

## துன்பம் நேரும்போது நபி(ﷺ) அவர்கள் ஓதிய சிறந்த துஆ

لَآ اِلٰهَ اِلاَّ اللّٰهُ الْعَظِيْمُ الْحَلِيْمُ، لَآ اِلٰهَ اِلاَّ
اللّٰهُ رَبُّ الْعَرْشِ الْعَظِيْمِ، لَآ اِلٰهَ اِلاَّ اللّٰهُ رَبُّ
السَّمٰوَاتِ وَرَبُّ الْأَرْضِ وَرَبُّ الْعَرْشِ الْكَرِيْمِ،

லாயிலாஹ இல்லல்லாஹுல் அழீமுல் ஹலீம்.
லாயிலாஹ இல்லல்லாஹு ரப்புல் அர்ஷில் அழீம்.
லாயிலாஹ இல்லல்லாஹு ரப்புஸ் ஸமாவா(த்)தி
வரப்புல் அர்ழி வரப்புல் அர்ஷில் கரீம்.

கண்ணியமிக்கோனும் பொறுமைமிக்கோனுமாகிய அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் யாரும் இல்லை. மாபெரும் அர்ஷின் அதிபதியான அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் யாரும் இல்லை. வானங்கள் மற்றும் பூமியின் அதிபதியும் சிறப்பான அர்ஷின் அதிபதியுமான அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் யாரும் இல்லை.

அறிவிப்பாளர் : இப்னு அப்பாஸ்(ரலி) அவர்கள், புகாரி 6346

# கவலைகள், துன்பங்கள் நீங்க ஓத வேண்டிய பிரார்த்தனைகள்

04

اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنَ الْهَمِّ وَالْحَزَنِ والْعَجْزِ وَالْكَسَلِ
والْبُخْلِ وَالْجُبْنِ وَضَلَعِ الدَّيْنِ وَغَلَبَةِ الرِّجَالِ

அல்லாஹும்ம இன்னீ அவூது பிக மினல் ஹம்மி
வல் ஹஸனி வல் அஜ்ஸி வல் கஸலி வல் புக்லி
வல் ஜுப்னி வளலஇத் தைனி வகலபதிர் ரிஜால்

இறைவா! துக்கம், கவலை, பலவீனம், சோம்பல், கஞ்சத்தனம், கோழைத்தனம், கடன் சுமை, மற்றவர்களின் அடக்குமுறை ஆகிய அனைத்தை விட்டும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.

அறிவிப்பாளர் : அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள், புகாரி 5425

# கவலைகள், துன்பங்கள் நீங்க ஓத வேண்டிய பிரார்த்தனைகள்

05

إِنَّا لِلَّهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ، اَللّٰهُمَّ أْجُرْنِي فِي مُصِيبَتِي وَأَخْلِفْ لِي خَيْرًا مِنْهَا

இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன். அல்லாஹும்மஃஜுர்னீ ஃபீ முஸீபத்தீ வஅக்லிஃப் லீ கைரம் மின்ஹா

நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்கள். அவனிடமே திரும்பிச் செல்பவர்கள். இறைவா! எனக்கேற்பட்ட இத்துன்பத்தை நான் பொறுமையுடன் ஏற்றதற்கு மாற்றாக எனக்கு நன்மையை வழங்குவாயாக!

**சிறப்பு**

ஓர் அடியார் தமக்கு ஒரு துன்பம் ஏற்படும்போது இந்த துஆவை ஓதினால் அவர் துன்பம் அடைந்ததற்காக அவருக்கு அல்லாஹ் நன்மையை வழங்கி, அதைவிடச் சிறந்த ஒன்றை அதற்கு ஈடாக வழங்காமல் இருப்பதில்லை' என அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறியதை நான் கேட்டேன்.

முஸ்லிம் 1674, அறிவிப்பாளர் : உம்மு ஸலமா (ரலி) அவர்கள்

# கவலைகள், துன்பங்கள் நீங்க ஓத வேண்டிய பிரார்த்தனைகள்

06

اللّٰهُ اللّٰهُ رَبِّي لَا أُشْرِكُ بِهِ شَيْئًا

அல்லாஹு அல்லாஹு
ரப்பீ லா உஷ்ரிகு பிஹி ஷைஆ

அல்லாஹ்வே அல்லாஹ்வே
எனது இறைவன், அவனுக்கு
நான் எதையும் இணைவைக்க மாட்டேன்.

அறிவிப்பாளர் : அஸ்மாஃ பின்த் உமைஸ்(ரலி) அவர்கள், அபூதாவூத் : 1527

# கவலைகள், துன்பங்கள் நீங்க ஓத வேண்டிய பிரார்த்தனைகள்

07

اللَّهُمَّ إِنِّي أَعُوذُ بِكَ مِنْ جَهْدِ الْبَلَاءِ،
وَدَرَكِ الشَّقَاءِ، وَسُوءِ الْقَضَاءِ، وَشَمَاتَةِ الْأَعْدَاءِ

அல்லாஹும்ம இன்னீ அவூது பிக
மின் ஜஹ்தில் பலாயி
வ தரகிஷ் ஷகாயி வ ஸூயில் களாயி,
வ ஷமாத(த்)தில் அஃதாயி

யா அல்லாஹ் ! தாங்கமுடியாத சோதனை, அழிவில் வீழ்வது, விதியின் கேடு, எதிரிகளால் ஏற்படும் மன உளைச்சல் ஆகியவற்றிலிருந்து நான் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.

அறிவிப்பாளர்: அபூஹுரைரா(ரலி) அவர்கள், புகாரி 6616

# கவலைகள், துன்பங்கள் நீங்க ஓத வேண்டிய பிரார்த்தனைகள்

08

أَللَّهُمَّ رَحْمَتَكَ أَرْجُوْ، فَلاَ تَكِلْنِيْ إِلَى نَفْسِيْ طَرْفَةَ عَيْنٍ،
وَأَصْلِحْ لِيْ شَأْنِيْ كُلَّهُ، لاَ إِلَهَ إِلاَّ أَنْتَ

அல்லாஹும்ம ரஹ்மதக அர்ஜூ,ப(ف)லா தகில்னீ
இலா நப்(ف)ஸீ தர்ப(ف)த ஐனின்,
வ அஸ்(ص)லிஹ்லீ ஷஃனீ குல்லஹூ லா
இலாஹ இல்லா அன்த.

யாஅல்லாஹ்! நான் உனது அருளையே ஆதரவு வைத்துள்ளேன்.
கண் சிமிட்டும் (நேர) அளவிற்குக் கூட என்னை என்பால்
சார்ந்திருப்பவனாக நீ ஆக்கி விடாதே!.
மேலும் என்னுடைய அனைத்து
காரியங்களையும் சீர்படுத்துவாயாக! வணக்கத்திற்குரியவன்
உன்னைத் தவிர வேறு யாருமில்லை.

அறிவிப்பாளர்: அபூபக்ரா(ரலி) அவர்கள், அபூதாவூத் 5092

# கவலைகள், துன்பங்கள் நீங்க ஓத வேண்டிய பிரார்த்தனைகள்

09

اللَّهُمَّ لَا سَهْلَ إِلَّا مَا جَعَلْتَهُ سَهْلًا ،
وَأَنْتَ تَجْعَلُ الْحَزْنَ إِذَا شِئْتَ سَهْلًا

அல்லாஹும்ம லா ஸஹ்ல இல்லா
மா ஜஅல்தஹு ஸஹ்லன் வ அன்த தஜ்அலுல்
ஹஸ்( ز )ன இதா ஷிஃத ஸஹ்லன்

யா அல்லாஹ்! நீ எளிதாக்கிய காரியத்தைத் தவிர வேறு எதுவும் எளிதானது அல்ல! மேலும் நீ நாடிவிட்டால் கவலைகளையும் எளிதாக்கி விடுகிறாய்.

அறிவிப்பாளர்: அனஸ் இப்னு மாலிக்(ரலி) அவர்கள். இப்னுஹிப்பான் 974

# கவலைகள், துன்பங்கள் நீங்க ஓத வேண்டிய பிரார்த்தனைகள்

10

حَسْبُنَا اللّٰهُ وَنِعْمَ الْوَكِيلُ

ஹஸ்புனல்லாஹு வ நிஃமல் வகீல்.

அல்லாஹ்வே எங்களுக்குப் போதுமானவன், அவனே எங்களுக்குச் சிறந்த பாதுகாவலன்.

திருக்குர்ஆன் 3:173

# கவலைகள், துன்பங்கள் நீங்க ஓத வேண்டிய பிரார்த்தனைகள்

11

حَسْبِيَ اللَّهُ وَنِعْمَ الْوَكِيلُ

ஹஸ்பியல்லாஹு வ நிஃமல் வகீல்.

அல்லாஹ்வே எனக்குப் போதுமானவன். மேலும் பொறுப்பேற்றுக் கொள்பவர்களில் அவனே சிறந்தவன்.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ்(ரலி) அவர்கள். புகாரி 4564

# கவலைகள், துன்பங்கள் நீங்க ஓத வேண்டிய பிரார்த்தனைகள்

12-A

اَللّٰهُمَّ إِنِّي عَبْدُكَ، وَابْنُ عَبْدِكَ، وَابْنُ أَمَتِكَ، نَاصِيَتِي بِيَدِكَ، مَاضٍ فِيَّ حُكْمُكَ، عَدْلٌ فِيَّ قَضَاؤُكَ، أَسْأَلُكَ بِكُلِّ اسْمٍ هُوَ لَكَ، سَمَّيْتَ بِهِ نَفْسَكَ، أَوْ أَنْزَلْتَهُ فِي كِتَابِكَ، أَوْ عَلَّمْتَهُ أَحَدًا مِنْ خَلْقِكَ، أَوِ اسْتَأْثَرْتَ بِهِ فِي عِلْمِ الْغَيْبِ عِنْدَكَ، أَنْ تَجْعَلَ الْقُرْآنَ رَبِيعَ قَلْبِي، وَنُورَ صَدْرِي، وَجَلَاءَ حُزْنِي وَذَهَابَ هَمِّي

அல்லாஹும்ம இன்னீ அப்துக, வப்னு அப்திக, வப்னு அமதிக, நாஸி(ص)ய(த்)தீ பியதிக, மாழி(ض)ன் பி(ف)ய்ய ஹுக்முக, அத்லுன் பி(ف)ய்ய கலா(ض)வுக, அஸ்அலுக பிகுல்லி இஸ்மின் ஹுவ லக, ஸம்மைத்த பிஹி நஃப்ஸக, அவ் அன்ஸ(ز)ல்தஹு பீ(ف) கிதாபிக, அவ் அல்லம்தஹு அஹதன் மின் ஹ(خ)ல்கிக, அவிஸ்தஃஸர்(த்)த பிஹி பீ(ف) இல்மில் கை(غ)பி இன்தக, அன் தஜ்அலல் குர்ஆன ரபீஅ கல்பீ, வ நூர ச(ص)த்ரீ, வஜலாஅ ஹுஸ்(ز)னீ, வதஹாப ஹம்மீ

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ்(ரலி) அவர்கள், அஹ்மத் 3712

# கவலைகள், துன்பங்கள் நீங்க ஓத வேண்டிய பிரார்த்தனைகள்

12-B

யா அல்லாஹ்! நான் உன் அடிமை. உன் அடிமைகளான ஓர் ஆண், ஒரு பெண்ணின் மகனாவேன். எனது முன்னெற்றி ரோமம் உனது கையிலே உள்ளது. என்னில் உனது கட்டளையே செல்லுபடியாகிறது. என் விஷயத்தில் உன் தீர்ப்பு நீதமானது. உனக்குச் சொந்தமான ஒவ்வொரு திருப்பெயர் கொண்டும் நான் உன்னிடம் யாசிக்கிறேன். அந்தப் பெயரை நீயே உனக்குச் சூட்டியிருப்பாய், அல்லது உனது வேதத்தில் அதை நீ அருளியிருப்பாய், அல்லது உனது படைப்புகளில் எவருக்கேனும் அதைக் கற்றுக் கொடுத்திருப்பாய், அல்லது மறைவானவை பற்றிய ஞானத்தில் உன்னிடத்தில் அதை வைத்திருப்பாய். (அவை அனைத்தைக் கொண்டும் உன்னிடம் கேட்கிறேன்.) அல்குர்ஆனை என் இதயத்தின் வசந்தமாக்குவாயாக! என் நெஞ்சத்தின் ஒளியாக்குவாயாக! எனது துயரத்தை நீக்கக்கூடியதாகவும் எனது கவலையை மறைக்கக் கூடியதாகவும் ஆக்குவாயாக!

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ்(ரலி) அவர்கள், அஹ்மத் 3712

# கவலைகள், துன்பங்கள் நீங்க ஓத வேண்டிய பிரார்த்தனைகள்

13

يَا حَيُّ يَا قَيُّومُ بِرَحْمَتِكَ أَسْتَغِيثُ

யா ஹய்யு யா கய்யூமு பிரஹ்மதிக
அஸ்தகீ(غ)ஸ்(ث)

என்றும் உயிருடனிருப்பவனே! என்றும் நிலைத்திருப்பவனே! உனது கருணையைக் கொண்டு இரட்சிப்புத் தேடுகிறேன்.

அறிவிப்பாளர்: அனஸ் இப்னு மாலிக்(ரலி) அவர்கள், திர்மிதி 3524

# கவலைகள், துன்பங்கள் நீங்க ஓத வேண்டிய பிரார்த்தனைகள்

14

**நெருக்கடியின் போது ஓதுமாறு அல்லாஹ்வின் தூதர்(ﷺ) அவர்கள் அலி (ரலி) அவர்களுக்கு கற்றுத்தந்த துஆ**

لَا إِلَهَ إِلَّا اللّٰهُ الْحَلِيْمُ الْكَرِيْمُ، سُبْحَانَ اللّٰهِ، وَتَبَارَكَ اللّٰهُ رَبُّ الْعَرْشِ الْعَظِيْمِ، وَالْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ.

**லா இலாஹ இல்லல்லாஹுல் ஹலீமுல் கரீமு ஸுப்ஹானல்லாஹி வதபார(க்)கல்லாஹு ரப்புல் அர்ஷில் அழீ(ظ)மி வல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன்.**

சங்கைமிக்கோனும், பொறுமைமிக்கோனுமாகிய அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் யாரும் இல்லை. அல்லாஹ் தூயவன், மகத்தான அர்ஷின் இரட்சகனான அல்லாஹ் பாக்கியமிக்கவன், அகிலங்களின் இரட்சகனான அல்லாஹ்வுக்கே எல்லப் புகழும்

**அறிவிப்பாளர்: அலி (ரலி) அவர்கள், அஹ்மத் 701**

# கவலைகள், துன்பங்கள் நீங்க ஓத வேண்டிய பிரார்த்தனைகள்

15

**தாங்க முடியாத உச்சக் கட்ட சோதனையின் போதும் மரணத்தைக் கேட்காமல் இவ்வாறு பிரார்த்திக்க நபி(ﷺ) அவர்கள் வழிகாட்டியுள்ளார்கள்**

اَللّٰهُمَّ أَحْيِنِيْ مَا كَانَتِ الْحَيَاةُ خَيْرًا لِيْ وَتَوَفَّنِيْ إِذَا كَانَتِ الْوَفَاةُ خَيْرًا لِيْ

அல்லாஹும்ம அஹ்யினீ மா கானத்(த்)தில் ஹயா(த்)து கை(خ)ரன்லீ வதவப்(ف)பனீ இதா கானத்(த்)தில் வபா(ف)(த்)து கை(خ)ரன் லீ

இறைவா! வாழ்வது எனக்கு நல்லதாக இருந்தால் என்னை வாழச் செய்வாயாக ! மரணம் எனக்கு நல்லதாக இருந்தால் மரணிக்கச் செய்வாயாக!

அறிவிப்பாளர் : அனஸ் இப்னு மாலிக்(ரலி) அவர்கள், புகாரி 5671